செ.வெ.எண்: 440 12.6.08

# பத்திரிக்கைச் செய்தி

## ஜூன் 12 – குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம்

தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றிட முதல்வர் கலைஞர் தலைமையிலான அரசு உறுதி பூண்டு தமிழகத்தை குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்க தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒவ்வொரு வருடமும், ஜூன் 12–ம் தேதியானது உலக அளவில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12–ல் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்பட வேண்டும் என்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தமிழகம் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. 2010–ம் ஆண்டுக்குள் தமிழகத்தை குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக அறிவித்திட கலைஞர் தலைமையிலான அரசு உறுதி பூண்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் குழந்தைத் தொழிலாளர் இல்லாத ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி வார்டுகள் என அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குழந்தைத் தொழிலாளர் அகற்றுதலில் சிறப்பான முறையில் பணியாற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2007–ம் ஆண்டு முதல் தமிழக அரசு சார்பில் கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதே போல் சிறப்பாக செயல்படும் மாவட்ட ஆட்சியர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

இண்டஸ் மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் நலத்திட்டங்கள் செயல்படும் 17 மாவட்டங்களில் இயங்கும் குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் சிறப்பாக பணியாற்றிய சிறப்புப்பள்ளி ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதும், குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் பயின்று பின் முறையான பள்ளியில் சேர்க்கப்பட்டு, உயர்நிலை மற்றும் மேல்நிலைத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ/ மாணவியர்களுக்கு பரிசுகளும் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

தமிழக அரசின் தொழிலாளர் துறை சார்பில் நடத்தப்படும் மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கத்தின் சார்பில் ஜூன் 12, வியாழக்கிழமை காலை கலைவாணர் அரங்கத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்ற மாநில அளவிலான கூட்டத்தில் வணக்கத்துக்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு மா. சுப்பிரமணியன்

அவர்கள் இண்டஸ்/ தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் பயின்று பின் முறையான பள்ளியில் சேர்க்கப்பட்டு, உயர்நிலை மற்றும் மேல்நிலைத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி முன்னிலையுரையாற்றினார். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் அவர்கள் குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் சிறப்பாக பணியாற்றிய சிறப்புப்பள்ளி ஆசிரியர்களுக்கு 'நல்லாசிரியர் விருது' வழங்கி, குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான தமிழக அரசின் செயல்பாடுகள் பற்றிய கையேடு மற்றும் விழிப்புணர்வு சுவரொட்டிகள் வெளியிட்டு சிறப்புரையாற்றினார். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு தா.மோ. அன்பரசன் அவர்கள் குழந்தைத் தொழிலாளர் அகற்றுதலில் சிறப்பாக பணியாற்றிய உள்ளாட்சி அமைப்புகள், சேலம், விருதுநகர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்ட ஆட்சியர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்து பேருரையாற்றினார்.

இக்கூட்டத்தில் தொழிலாளர் துறை ஆணையர் திரு அ. சுகுமாரன், இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை செயலர் திரு இரமேஷ் குமார் கன்னா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றினார். திரு செ. குப்புசாமி, எம்.பி., தொழிலாளர் முன்னேற்ற பேரவை, திருமதி ஆண்டாள் தாமோதரன், துணைத் தலைவர், இந்திய குழந்தைகள் நலச்சங்கம், திரு சுரேஷ் குமார், 6வது மண்டலக் குழு தலைவர், சென்னை மாநகராட்சி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

திண்டுக்கல், சக்தி கலை பண்பாட்டு மையத்தின் தப்பாட்டம், விருதுநகர் மற்றும் வேலூர் மாவட்ட குழந்தைத் தொழிலார் திட்ட சிறப்புப் பள்ளி மாணவ/ மாணவியர் நடத்திய கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெற்றன.

இந்த நிகழ்ச்சியில் சென்னை, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள், தொழிலாளர் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், சுய உதவிக் குழு தாய்மார்கள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் பொதுமக்கள் உள்ளிட்ட சுமார் 1500 பேர் கலந்துக் கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியாக தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வர், திரு. க. இளங்கோவன், அவர்கள் நன்றியுரை கூற கூட்டம் இனிதே முடிவடைந்தது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9